# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆவணி 24 செவ்வாய்க்கிழமை (9-9-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 272


# எட்டாயிரம் கே.வி. வலு ஜெனரேட்டர் யாழ்ப்பாணத்துக்கு வழங்க ஏற்பாடு!

## ஜனாதிபதி அனுமதி; உடனடியாக நிதி வழங்கவும் இணக்கம்

யாழ்ப்பாணம், செப். 9

யாழ்ப்பாணத்தில் அனல் மின் நிலையம் அமைக்கப்படும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக 8 ஆயிரம் கே. வி. ஏ. வலுவுள்ள பாரிய ஜெனரேட்டரை எடுத்து வந்து யாழ்ப்பாணத்தில் பொருத்தி இயக்க வைப்பதற்கு இலங்கை மின்சார சபைக்கு ஜனாதிபதி அனுமதி வழங்கியிருப்பதாகத் தெரியவருகின்றது.

குடாநாட்டில் சகல பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்க வசதியாக காங்கேசன்துறையில் அனல் மின்சார நிலையம் ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால் அந்த நிலையத்துக்கு தேவையான உபகரணங்களை இங்கு எடுத்து வருவதில் சிரமங்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து அத்திட்டத்தை தற்காலிகமாகக் கைவிடுவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து குடாநாட்டில் சகல பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்க வசதியாக எண்ணாயிரம் கே. வி. ஏ. வலுவுள்ள பாரிய ஜெனரேட்டரை எடுத்து வந்து இங்கு பொருத்த ஜனாதிபதி மின்சார சபைக்கு அனுமதி வழங்கியுள்ளதுடன், அதற்கான நிதியை உடனடியாக வழங்கவும் இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் குடாநாட்டில் இயங்கும் பல்வேறுஜெனரேட்டர்கள் மூலம் 2 ஆயிரத்து 500 கே. வி. ஏ மின்சார வலுவே பெறப்படுகிறது.

புதிய ஜெனரேட்டர் பொருத்தப்பட்டதும் குடாநாட்டுக்கு தேவையான 10 ஆயிரம் கே. வி. ஏ. வலு மின்சாரத்தைப் பெறமுடியும் என்றும்-

அதன் பின்னர் குடாநாடு முழுவதும் இரவு — பகலாக மின்விநியோகம் மேற்கொள்வது தொடர்பாக ஆராயப்படும் என்றும்-

மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எண்ணாயிரம் கே. வி. ஏ. ஜெனரேட்டர் அனேகமாக சுன்னாகத்தில் பொருத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-3)

## மணலாறில் உயிரிழந்த 8 புலிகளின் சடலங்கள் இன்று ஒப்படைப்பு?

வவுனியா, செப். 9

மணலாற்றில் உள்ள கல்யாணபுர இராணுவ முகாம் மீது நேற்றுக் காலை விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தியதாக கூறப்படுகின்றது.

இத்தாக்குதலில் உயிரிழந்ததாகக் கூறப்படும் எட்டு விடுதலைப் புலிகளின் சடலங்களைப் பொறுப்பேற்றுப் புலிகளிடம் ஒப்படைப்பதற்காக இன்று மணலாறுக்கு ( வெலிஓயாவுக்கு ) வருமாறு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வடக்கு — கிழக்கு இணைப்பாளர் சிவநாதன் கிஷோருக்குப் படை வட்டாரங்களில் இருந்து அழைப்புக் கிடைத்திருப்பதாக வவுனி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைக்கு சீருடை பெற்றதில் ஊழல்

கொழும்பு, செப். 9

கடற்படையினருக்கு 50 ஆயிரம் மீற்றர் வெள்ளை சிந்தெட்டிக் துணி விநியோகித்த கேள்விப்பத்திர நடவடிக்கையில் ஊழல் இடம்பெற்றிருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

கேள்விப் பத்திரத்தில் கோரப்பட்டதற்கு மாறாக தராதரம் குறைந்த துணி வழங்கப்பட்டிருப்பது இது தொடர்பான விசாரணையின் போது தெரியவந்திருக்கின்றதாம்.

(உ)

# இணைப்புக் குறித்து கிழக்கில் தனி சர்வஜன வாக்கெடுப்பு?

## அரசு ஆராய்ந்து வருகின்றதாம்!

கொழும்பு, செப்ரெம்பர் 9

**வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தொடர்ந்து இணைந்திருக்க வேண்டுமா என்பதனைத் தீர்மானிப்பதற்கு மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவது குறித்து அரசு ஆராய்ந்து வருகின்றதாம்!**

இதேசமயம் —

கிழக்கிலங்கையில் முஸ்லிம்களுக்கு என தனியாக தென்கிழக்கு மாகாண சபையை உருவாக்குவது தொடர்பாக சம்மாந்துறை, பொத்துவில், கல்முனை மற்றும் அம்பாறை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பகுதிகளில் வேறு ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது குறித்தும் ஆராயப்படுகின்றது.

வடக்கு – கிழக்கு இணைப்புத் தொடர்பாக கிழக்கில் நடத்தப்படும் கருத்துக்கணிப்பில் இணைப்புக்கு ஆதரவற்ற முடிவுகிட்டுமானால் மட்டக்களப்பு — திருகோணமலை மாவட்டங்களுககு தனி நிர்வாக அலகு வழங்கவேண்டிய நிலை ஏற்படும் என்று அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

(உ-3-150)

## தென்னாசியாவுக்குப் பொறுப்பான அமெரிக்க உயர் அதிகாரி கொழும்பு வந்துள்ளார்!

கொழும்பு, செப். 9

தென்னாசியா தொடர்பான அமெரிக்காவின் கொள்கைகளுக்குப் பொறுப்பான உயர் அதிகாரி கோல் இன்ரபர் கொழும்புக்கு விஜயம் செய்துள்ளார்.

தென்னாசியா தொடர்பான விடயங்களில் அமெரிக்கா முன்னெப்போதும் இல்லாத வகையில் ஆர்வம் கொண்டுள்ள இத்தருணத்தில் அவரது விஜயம் முக்கியத்துவம் பெறுவதாக அவதானிகள் தெரிவித்தனர்.

கோல் இன்ரபரின் இலங்கை விஜயம் நிலைமைகளை, தகவல்களைத் தெரிந்து கொள்வதற்காக மட்டுமே என்று கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

தென்னாசியா தொடர்பான விவகாரங்களுக்குப் பொறுப்பான உயர் அதிகாரியாக இவர் கடந்த மாதம் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனால் நியமிக்கப்பட்டார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் மது பாவனை புலிகளால் முற்றாகத் தடை!

வவுனியா, செப். 9

மட்டக்களப்பு மாவட்டத்தில் மதுபானம் அருந்துதல், மதுபான விற்பனை, மதுபானத்தை வைத்திருத்தல் ஆகியவை அனைத்துக்கும் தடை விதிக்கப்பட்டிருப்பதாக விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றார்கள்.

இது பற்றிய அறிவிப்பை 'புலிகளின் குரல்' நேற்று விடுத்தது.

மதுபானத்தை வீடுகளில் வைத்திருப்போர் உடனடியாக அவற்றை நிலத்தில் ஊற்றி விடும்படியும் புலிகள் கேட்டுள்ளனர்.

நச்சுத்தன்மை வாய்ந்த சாராயத்தை அருந்தியதால் கடந்த வாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் 60 க்கு மேற்பட்டோர் உயிரிழந்தது தெரிந்ததே,

இந்த அனர்த்தத்தைத் தொடர்ந்தே விடுதலைப் புலிகளின் இந்தத் தடை உத்தரவு வெளியாகியுள்ளது.

([illegible])

## இராணுவத்தினரின் செயல்களை ஆட்சேபித்து செங்கலடி பிரதேச செயலகம் முன் கிராம அலுவலர்கள் மறியல் போர்!

மட்டக்களப்பு, செப். 9

மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்த ஆறு கிராமசேவையாளர்கள் கைது செய்யப்பட்டு நீண்ட காலம் தடுத்து வைக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்தும்—

கிராம சேவையாளர்களுக்குரிய பொலீஸ் அதிகாரங்களை மதிக்காமல் இராணுவத்தினர் செயற்படுவதைக் கண்டித்தும்—

செங்கலடிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 35 கிராம சேவையாளர்களும் நேற்று தமது பிரதேச செயலகத்துக்கு முன்னால் மறியல் நடவடிக்கையில்ஈடுபட்டனர்.

மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்த இரு கிராம சேவையாளர்கள் கொழும்பு ஆறாம் மாடி விசாரணைப் பிரிவிலும், இருவர் களுத்துறையிலும், இருவர் மட்டக்களப்பிலும் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

பிரதேச செயலகத்தின் முன்னால் தாங்கள் நடத்திய மறியல் நடவடிக்கையின் பின்னர் பிரதேச செயலரிடம் தங்களது கோரிக்கை அடங்கிய மனு ஒன்றை கிராம சேவையாளர்கள் கையளித்தனர்.

(உ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டடப் பொருள்கள் உதவி

மல்லாகம், செப். 9

வலி. வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் மீளக் குடியமர்ந்தோருக்கு கட்டடப் பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

இப் பொருள்கள் 1500 ரூபாவுக்கு உட்பட்ட வருமானமுடையவர்களுக்கே வழங்கப்படும். (இ-86)

# மரண அறிவித்தல்கள்

## பத்திநாதர் கிளாறம்மா

சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட பத்திநாதர் கிளாறம்மா 8-09-97 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பத்தி நாதரின் (பிரபல வர்த்தகர் - சில்லாலை) அருமை மனைவியும், ப.மரியநாயகத்தின் அன்புத் தாயாரும், றோஸ்மலரின் அன்பு மாமியாரும், சாந்தா (கனடா), காலஞ்சென்ற சாந்தகுமார் மற்றும் லீமா (ஜேர்மனி), றாஜ் (மாணவன், சென். பற்றிக்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று 9-09-97 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

M. செபஸ்ரியாம்பிள்ளை

சென்யேம்ஸ் வீதி,
பண்டத்தரிப்பு.

(49553)

## சபாபதிப்பிள்ளை குகதாசன்

(இளைப்பாறிய சாலைப் பரிசோதகர்,
இ.போ.ச., பருத்தித்துறை)

பத்தமேனி அச்சுவேலியைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை குகதாசன் நேற்று (08-09-97) காலமானார்.

இவர் திருப்பதியின் அன்புக் கணவரும், நளாயினி, தமயந்தி, அனுசியா ஆகியோரின் அன்புத் தந்தையும், குமாரதாசன், பத்திரதாசன், இராஜேஸ்வரி, சத்தியபாமா, புஸ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09-09-97) நண்பகல் 12-00 மணிக்கும் 1-00மணிக்கும் இடையில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கு. திருப்பதி (மனைவி),
பிள்ளைகள்.

பத்தமேனி,
அச்சுவேலி.

(49551)

## சின்னத்தம்பி பெரியதம்பி

(ஓய்வுபெற்ற ஊழியர், மக்கள் வங்கி, சாவகச்சேரி)

வாகையடி வீதி, மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி பெரியதம்பி 07-09-97 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், பருபதத்தின் சகோதரனும் காசிப்பிள்ளை அன்னபூரணத்தின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 08-09-97 திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

பெ. அன்னலட்சுமி
(மனைவி)

வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(49557)

## செல்லப்பா தியாகராஜா

சங்கானை நிகரை வீதியைச் சேர்ந்த(ஓய்வுபெற்ற அரச பெருந்தோட்ட Field Officer) செல்லப்பா தியாகராஜா 8-9-97 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற தையல்நாயகியின் அன்புக் கணவரும், நாகரத்தினம், குணசிங்கம் (Circle Centre, Chankanai) துரைசிங்கம்(சவுதி), செல்வமலர்(மனோ), மோகன்(லண்டன்), இராஜேஸ்வரி ஆகியோரின்அன்புத் தந்தையும், கனகரத்தினம் (ஓய்வுபெற்ற பொலீஸ் பிரதம லிகிதர்), செல்வரஞ்சிதம், அருள்மொழிதேவி, செல்வநாதன்(ஓய்வுபெற்ற வனபரிபாலன உத்தியோகத்தர்), தேவராசா (தேவா) [அஞ்சல் அலுவலகம், சங்கானை], விஜயலக்ஷ்மி ஆகியோரின் அன்பு மாமனாரும், சரோஜினி(கனடா), சிறீராஜகாந்தன்(கனடா) சுசிலா (லண்டன்), சுபாஜினி (லண்டன்), ரவிக்காந்தன்(இந்தியா), அகிலா(டென்மார்க்), சுகந்தி(கனடா) நிசங்கர் (மாணவன், யாழ்ப்பாணக் கல்லூரி), பிரேமிளா (சுவிஸ்), பிரகலாதன் (சவுதி), பிரசாந்தன் (மாணவன்), சுமித்திரன் (ஜேர்மனி), சுகுணன், சுமணன் (கொழும்பு), சர்மிளா (மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி), சுகாஜினி, சுஜந்தினி, சுதர்ஸன் (வட்டு. இந்துக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (9-9-97) பிற்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கானை கராச்சி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:

தி. குணசிங்கம்
(மகன்)

சேக்கிள் சென்ரர்,
சங்கானை.

(49556)

## சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம், செப்.9

மிருசுவில் கெற்பேலி பரமசிவன் ஆலயத்தில் கடந்த பத்துத் தினங்களாக வருடாந்த அபிஷேகம் நடைபெற்று வருகின்றது. இறுதிநாளானஇன்று விசேட நிகழ்வாக காலை 10 மணிக்கு கலச சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. தொடர்ந்து அன்னதானம் நடைபெறும். (ஐ-5)

★ ★ ★

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. உற்சவம் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 15 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ 100)

★ ★ ★

காரைநகர் இலகடி அத்திபுரம் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவம் கடந்த வெள்ளியன்று ஆரம்பமாகியது. தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெற்று இறுதிநாளன்று சுவாமி வீதியுலா இடம்பெறும். (ஐ)

## கடையில் திருட்டு

திருநெல்வேலி, செப்.9

திருநெல்வேலி பிரதான வீதியிலுள்ள பலசரக்குக் கடைஒன்று இரவுவேளையில் உடைக்கப்பட்டு சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன. (இ-135)

## போஷாக்கு நிகழ்ச்சி திட்டம்

நெல்லியடி, செப்.9

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் போஷாக்கு நிகழ்ச்சித்திட்டம் இரண்டு பிரிவுகளாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

முதலாம் பிரிவில் கற்கோவளம் கிராமசேவை அலுவலர் பகுதியில் இதுதொடர்பான கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது.

இரண்டாவது பிரிவில் புலோலி மேற்கு கிராம சேவை அலுவலர் பகுதியில் கடந்த 16ஆம்திகதி இது ஆரம்பிக்கப்பட்டது.

உணவு, சுகாதாரம், வீட்டுத் தோட்டம், தாய் சேய் நலம், குடும்பக்கட்டுப்பாடு, உணவு பதனிடல், உணவு சேமித்தல் போன்ற பல விடயங்களை உள்ளடக்கிய இக்கருத்தரங்கில் சுகாதாரப் பகுதியைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் கலந்து கொண்டு பயிற்சி அளித்து வருகின்றார்கள். (இ-109)

**PHYSICS**
**PAPER CLASS**
புதிய, பழைய
பாடத்திட்டம்
ஆரம்பம்: **10 - 09 - 97**
புதன் 10.00 A.m.
**Mr. ஸ்பெல்மன்**
**SHAMROCK**
(49540)

**சிவா**
**திரை அரங்கு**
கே. கே. எஸ். றோட்
யாழ்ப்பாணம்.
தினசரி 10.30 - 2.00 மணி
பார்த்தீபன் நடித்த
★ **அபிமன்யு**
(49558)

## நைதான இளைஞன் விடுதலை

யாழ்ப்பாணம், செப். 9

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட கோண்டாவிலைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காங்கேசன்துறைப் பொலீஸாரால் நேற்று யாழ். நீதிமன்றத்தில் வைத்து விடுதலை செய்யப்பட்டார்.

சின்னத்தம்பி மகேஸ்வரன் என்ற இளைஞனே விடுதலை செய்யப்பட்டவர் ஆவார். இவர் இரண்டு மாதங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டிருந்தார். (இ-5)

**எமது புதிய வெளியீடுகள்!**
கார்த்திக், விஜயசாந்தி நடித்த
★ **மிஸ்டர் மகாராணி**
ஜெயராம் நடித்த
★ **கிரிமினல் டைரி**
பார்த்தீபன் நடித்த
★ **அபிமன்யு**
**வீடியோ விமல்**
**யாழ்ப்பாணம்.**
[சி/1522]

### யாழ். இந்து மகளிர் கல்லூரி லியோ கழக அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

1 ஆம் பரிசு — **228**
2 ஆம் பரிக — **1860**
3 ஆம் பரிசு — **879**

இப் பரிசுகள் சின்னஞ்சூட்டு வைபவத்தின் போது வழங்கப்படும். இத்திகதி பின்னர் அறிவிக்கப்படும். (பரிசு கொடுக்கும் திகதியில் வராத அதிர்ஷ்டசாலிக்கு எக்காரணம் கொண்டும் பின்னர் பரிசு வழங்கப்பட மாட்டாது.)

**லியோ கழகம்,**
யாழ். இந்து மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(49555)

### வாழ்த்துகின்றோம்

கலாநிதி பட்டம் பெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர்

**உயர்திரு சிவலிங்கராஜா**

அவர்களை பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் புகழுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

**நிர்வாகம்,**
**விரிவுரையாளர்கள், மாணவர்கள்,**
**புதிய உயர் கல்லூரி,**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(47418)

### கண்ணீர் அஞ்சலி

யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தில் தொண்டர் ஆசிரியராகக் கடமையாற்றிய

**சுப்பிரமணியம் ஸ்ரீமுரளிதரன்**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

**அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,**
**பழையமாணவர் சங்கம்,**
**அபிவிருத்திச் சங்கம்.**

[47417]

### கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை

**திருமதி தேவநாயகி மகிழ்ராஜா**

அவர்களின் இறைபதப்பேறு கேட்டுத் துயருறும் நாம் அவரது குடும்பத்தினருக்கு எமது இதய பூர்வமான அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.
**சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.**

(சி/1521)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஸயர் அதிபர் முபுட்டு காலமானார்!

ரபாஸ், செப். 9

முன்னாள் ஸயர் நாட்டு அதிபர் முபுட்டு செசிசிகோ (வயது 66) மொரோக்கோ நாட்டில் நேற்று முன்தினம் இரவு காலமானார்.

நீண்டகாலமாகவே எலும்புப் புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர்



மொரோக்கோ தலைநகர் ராபாஸில் மருத்துவமனையில் காலமானதாக அறிவிக்கப்பட்டது.

தற்போது கொங்கோ ஜனநாயகக் குடியரசு என அழைக்கப்படும் முன்னாள் ஸயர் நாட்டை சுமார் 30 ஆண்டுகாலம் தமது சர்வாதிகார ஆட்சியின் கீழ் வைத்திருந்தவர் முபுட்டு.

நாட்டின் பொதுச் சொத்துக்களைத் தனது உடைமையாக்கிக் கொண்டு பதவி விலக மறுத்து நீண்டகாலமாக அதிகாரத்தை தக்க வைத்துக் கொண்டிருந்த முபுட்டுவுக்கு எதிராக ஸயரில் கடந்த 1996 இல் கிளர்ச்சி வெடித்தது.

லோறன் கபீலா தலைமையிலான கிளர்ச்சிப் படைகள் நாட்டின் வடபகுதி நகரான கிஸங்கானியில் ஆரம்பித்த கிளர்ச்சி நாடு முழுவதும் பரவியது.

ஸயர் பெரும்பகுதி அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

அமைதியான அதிகாரக் கைமாற்றம் ஒன்றை ஏற்படுத்த தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா தலைமையில் எடுக்கப்பட்ட சமாதான முயற்சிகள் தோல்வி கண்டதை அடுத்து கிளர்ச்சிப் படைகள் தலைநகர் கின்ஸாசாவை முற்றுகையிட்டன. அதன் பின்னரும் அதிகாரத்தை கையளிக்க முபுட்டு மறுத்துவிட்டார்.

கடைசியில் தமது நெருங்கிய உறவினர்கள் சகிதம் நாட்டில் இருந்து தப்பி வெளியேறி முதலில் கபூனிலும் பின்னர் மொரோக்கோவிலும் சென்று தஞ்சமடைந்தார்.

அதன் பின்னர் லோறன் கபீலா நாட்டின் அதிபரானார்.

மொரோக்கோ நாட்டில் தலைநகர் ரபாஸில் உள்ள ஹொட்டேல் ஒன்றில் முபுட்டு தமது குடும்பத்தவர்களுடன் தங்கியிருந்தார். (ஐ)

# இளவரசி டயானாவுக்கு நினைவுச் சின்னம்

## பிரதமர் ரொனி பிளயர் அறிவிப்பு

காலஞ்சென்ற பிரிட்டிஷ் இளவரசி டயானா ஸ்பென்ஸருக்கு நிரந்தர நினைவுச் சின்னம் ஒன்று அமைக்கப்படும் என்று பிரதமர் ரொனி பிளயர் தெரிவித்துள்ளார்.

அந்த நினைவுச் சின்னம் டயானாவின் எண்ணத்தையும், அவர் முக்கியத்துவம் கொடுத்த விடயங்களையும் பிரதிபலிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இளவரசியின் நினைவுக்கு எவ்வாறு மிகச் சிறந்த முறையில் மரியாதை செலுத்துவது என்றும் —

நினைவுச் சின்னம் எங்கே எப்படி அமைக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் அரசாங்கக் குழு ஒன்று கூடி ஆராய்ந்து முடிவு எடுக்கும் என்றும் பிரதமர் தெரிவித்தார், (ஐ)

# கென்யாவில் வன் செயல்; 6பேர் வெட்டிக் கொலை!

கென்யாவில் மும்பாஸா நகருக்கு அருகே மீண்டும் வன்செயல் வெடித்துள்ளது. ஆயுதம் தாங்கிய சுமார் 80 பேர் சிற்றுண்டிச் சாலை ஒன்றைத்தாக்கிய சம்பவத்தில் 6 பேர் பலியாகினர்.

சிற்றுண்டிச் சாலையில் வைத்து இவர்கள் 6 பேரும் வெட்டிக்கொலை செய்யப்பட்டனர்.

கடந்தஓகஸ்ட்டில் நிக்கோரி நகரில் காவல் நிலையம் ஒன்று தாக்கப்பட்டதைத் தொடர்ந்து கென்யாவில் வன்செயல்கள் வெடித்தன.

காவல் நிலையத்தில் இருந்து கைப்பற்றிய ஆயுதங்களைத் திருப்பி ஒப்படைக்குமாறு கிளர்ச்சியாளர்களை அரசு கேட்டிருக்கிறது.

கென்யாவில் நடந்த வன்செயல்களில் இதுவரை 50 பேர் உயிரிழந்துள்ளனர்.

# கல்கத்தா மைதானத்தில் அன்னையின் இறுதிச்சடங்கு

## சர்வமதத் தன்மையுடன் நடக்கும்

கல்கத்தா, செப். 9

காலஞ்சென்ற அன்னை தெரெஸாவின் இறுதிச் சடங்குகள் கல்கத்தா நகரில் உள்ள உதைபந்தாட்டத் திடலில்

உலக அரங்கில்

நடைபெறவுள்ளன. அன்னையின் இறுதி ஆராதனையைக் காண லட்சக்கணக்கான மக்கள் கூடுவர் என எதிர் பார்க்கப்படுவதால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இறுதிக் கிரியைகளை நடத்தும் ஒழுங்குகள், ஏற்பாடுகள் தொடர்பாக அன்னை இல்ல பிரதிநிதிகளும் அரச அதிகாரிகளும் கலந்துரையாடி வருகின்றனர்.

இறுதி ஆராதனை சர்வமத தன்மையைக் கொண்டிருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. சர்வசமய பிரார்த்தனைகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சனிக்கிழமை முழு அரச மரியாதையுடன் இறுதிச் சடங்குகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. அன்று காலை 9 மணிக்கு அரச மரியாதையுடன் அவரது உடல் பீரங்கி வண்டியில் தேவாலயத்தில் இருந்து எடுத்துச் செல்லப்படும். (ஐ)

## ஒரு குடும்பத்துக்கு ஒரு குழந்தை என்ற

# குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை எதிர்த்து சீனாவில் மக்கள் கலகம்!

பீஜிங், செப். 9

ஒரு குடும்பத்துக்கு ஒரு பிள்ளை என்ற குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்துக்கு எதிராக சீனாவின் தென் பகுதியில் மக்கள் எதிர்ப்புக் கலகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இச் சம்பவத்தில் பொலீஸாருடன் மோத முற்பட்ட மூவர் கைது செய்யப்பட்டதாக செய்திகள் கிடைத்துள்ளன.

உள்ளூர்க் கிராமங்களில் ஒரு பிள்ளையைப் பெற்றுக் கொண்ட பெண்கள் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்துள்ளார்களா அல்லது கருத்தடைச் சாதனங்களைப் பொருத்தியுள்ளனரா என்பதை குடும்பத் திட்ட அலுவலர்கள் பரிசோதனை செய்ய முற்பட்டபோது அதற்கு ஒத்துழைக்க மறுத்த மக்கள் எதிர்ப்புக் காட்டியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு குடும்பத்துக்கு ஒரு பிள்ளை என்ற சீனாவின் தேசிய கொள்கைப் பிரகடனம் மோசமான மனித உரிமை மீறல் எனக் குற்றச் சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்ற போதிலும் சீன அரசு தனது கொள்கையில் உறுதியாகவே இருந்து வருகிறது. (ஐ)

# மைக்கிறோ கொங்கிறீற் கூரைத் தகடு உற்பத்தி

யாழ்ப்பாணம், செப். 9

யாழ். மனித முன்னேற்ற நடுநிலையமும், கொழும்பு எச். டி. எல். அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து இங்கிலாந்தின் 'பரி' தொழில் நுட்பத்தினை (Parry Technology) கையாண்டு முதன் முறையாக யாழ்ப்பாணத்தில் மைக்கிறோ கொங்கிறீற் கூரைத்தகடுகளை உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளன.

உள்ளூர் மூலப்பொருள்களைக் கொண்டு ஜேர்மன் தொழில் நுட்பக் கூட்டுத்தாபனத்தின் அனுசரணையுடன் உற்பத்தி செய்யப்படுகின்ற இக் கூரைத்தகடுகள், குறைந்த விலையில் கிடைக்கக் கூடியதாக இருக்கும் என்றும் —

இக் கூரையால் வடியும் நீரைக் குடிப்பதற்கும் பாவிக்க முடியும் என்றும் — தெரிவிக்கப்படுகின்றது.

ஓர் ஆள் இலகுவாகக் கையாளக்கூடிய பாரம் கொண்ட இவ்வகை 4 கூரைத் தகடுகள் ஒரு சதுர மீற்றர் பரப்பளவு கூரை அமைப்பதற்குப் போதுமானதாக இருக்கும் என்றும் —

அத்துடன் இக் கூரைத்தகடுகளின் உற்பத்தி சுற்றுப்புறச் சூழலை பாதிக்காது; சுகாதாரத்திற்கும் கேடுவிளைவிக்காது என்றும் —

இவ்வகைக் கூரைத் தகடுகள் வெப்பத்தைத் தாங்க வல்லன என்பதால் வெப்ப நிலைகூடிய பிரதேசங்களிலும் பாவனையில் உள்ளன என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ-5)

# சாந்தை கிராம மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள்

சில்லாலை சாந்தை கிராமத்திலுள்ள 75 மீனவர்களுக்கு வலைகள் மற்றும் மீன் பிடி உபகரணங்களை வழங்குவதற்காக அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் 4 இலட்சத்து 89 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு முன் வந்துள்ளது.

இதே வேளை— பெரியவிளான் சந்திக்கருகாமையிலுள்ள பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளையைப்புனரமைப்பு செய்வதற்கு 4 இலட்சத்து 50 ஆயிரத்து 86 ரூபாவை வழங்குவதற்கும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் முன் வந்துள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தெரிவித்தார். (இ-135)

# செவிப் புலக் கருவிகள்

மல்லாகம், செப். 9

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் காது கேட்காத வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட நால்வருக்கு செவிப் புலக் கருவிகள் வழங்கப்படவுள்ளன. (இ-86)

# கொள்வனவு செய்யப்படாது விதை நெல் பெருமளவு தேக்கம்

வலிகாமம் தெற்கு, செப்.9

விவசாய சம்மேளனங்களூடாக இவ்வருட பெரும்போக நெற்செய்கைக்குத் தேவையான விதை நெல்லைப் பெறுவதற்கு விண்ணப்பித்த அநேகமான விவசாயிகள் விதைநெல்லை உரிய காலத்தில் பெற்றுக்கொள்ளாததால் கமநல கேந்திர நிலையங்களில் அவை தேங்கிக் கிடப்பதாகத் தெரியவருகின்றது.

உடுவில் கமநல கேந்திர நிலையத்தில் இதே போன்று 250 புசல் நெல் இன்னமும் விவசாயிகளால் கொள்வனவு செய்யப்படவில்லை.

'ஏ.ரி. 353' இன் மூன்றரை மாத விதை நெல் விவசாய கழகங்களூடாக விண்ணப்பித்தவர்களுக்கு வழங்கப்படவென தெரிவுசெய்யப்பட்டது ஆகும்.

இதுவரை 250 புசல் நெல்லே விநியோகிக்கப்பட்டுள்ளதாக உடுவில் கமநல கேந்திர நிலைய அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

உரிய காலத்தில் அவை பயன்படுத்தப்படாது போனால் கமநல கேந்திர நிலையத்துக்குப் பெரிதும் நஷ்டம் ஏற்படும் எனவும்—

எனவே விதைநெல்லுக்கு விண்ணப்பிக்காதவர்கள் கூட ஒருபுசல் 500 ரூபா வீதம் உடனடியாகப் பெற முடியும் எனவும்–அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார். (இ-152)

# விவசாயிகளுக்கு மண்வெட்டி

வலிகாமம் தெற்கு, செப். 9

உடுவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஆயிரத்து 500 விவசாயிகளுக்கு மண்வெட்டிகள் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாண விவசாய திணைக்களமும், பிரதேச [illegible] வெட்டிகளை மிக விரைவில் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளன. (இ-152)

# உள்ளூராட்சி ஊழியர்களுக்கு புதிய சேமிப்புக்கடன் திட்டம்

தென்மராட்சி, செப். 9

உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கென புதிய சேமிப்புக் கடன் திட்டத்தினை மக்கள் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.

'பிறணாம' என்னும் இச் சேமிப்புக் கடன் திட்டத்தில் ரூபா 50 ஆயிரம் வரை கடன் வழங்கப்படவுள்ளது.

சாதாரண தேவைகளுக்கு ரூபா 10ஆயிரமும் வீட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்ய ரூபா 25 ஆயிரமும், வீடு திருத்துவதற்கு ரூபா 50 ஆயிரமும் வழங்கப்பவுள்ளன.

இக் கடன் ஐந்து வருட காலத்தில் திருப்பிச் செலுத்தப்படவேண்டியது.

இக் கடன் திட்டம் கல்கிசை மாநகரசபையில் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டு ஏனைய உள்ளூராட்சி மன்றங்களுக்குமே விஸ்தரிக்கப்படவுள்ளது. (இ-117)

# மீளக்குடியமர்வு நிவாரணம்

நல்லூர், செப்.9

நல்லூர் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் 58 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்வுக்கான நிவாரணம் ரூபா ஐயாயிரம் வழங்கப்படவுள்ளது.

# ஞாபகார்த்த சொற்பொழிவு

சேர். பொன்னம்பலம்இராமநாதன் ஞாபகார்த்த சொற்பொழிவு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இன்றுசெவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிக்கு நடைபெறவுள்ளது.

பேராசிரியர் சி. சூரியகுமாரன் இந்தச் சொற்பொழிவை நிகழ்த்துவார்.

பரமேஸ்வராக் கல்லூரிப் பணிப்பாளர் சபையின் ஆதரவில் இந்த நினைவுச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (இ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசில் அங்கம் வகிக்கும் 4 கட்சிகள் ஜனாதிபதியைச் சந்திக்க விருப்பம்

## முக்கிய விடயங்கள் குறித்துப் பேசுவர்

கொழும்பு, செப். 9

அரசில் அங்கம் வகிக்கும் நான்கு கட்சிகள் சில முக்கியவிடயங்களில்தமது நிலைப்பாட்டை தெரிவிப்பதற்காக ஜனாதிபதியைச் சந்திக்க உள்ளன.

தமது நிலைப்பாடு தொடர்பாகப் பேச சந்தர்ப்பம் தருமாறு அக்கட்சிகள் ஜனாதிபதியைக் கேட்டுள்ளன.

சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, எம். ஜே. வி. பி. ஆகிய நான்கு கட்சிகளின் செயலாளர்களும் கையொப்பமிட்டு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வரவு - செலவுத்திட்டம், அரசமைப்பு சீர்திருத்தம், கல்விச் சீர்திருத்தம் ஆகியன தொடர்பாக தங்களுடன் கலந்தாலோசனை நடத்த வேண்டும் என்று தெரிவித்து கடந்த மாதம் 30 ஆம் திகதி ஜனாதிபதிக்கு அவர்கள் கடிதம் அனுப்பியிருந்தனர்.

இது தொடர்பாக பேசச் சந்தர்ப்பம் தருமாறும் அவர்கள் கேட்டிருந்தனர்.

இதுவரை அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த 4 கட்சிகளையும் சேர்ந்த 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசில் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது. (இ-150-3)


### யாழ்ப்பாண கல்வி நிலையம்

(சாந்தி சினிமா முன்பாக)

வருடம் 5-10 வரையும் O/L, A/L

**SPOKEN ENGLISH**

**With GRAMMAR, சிங்களம்**

**Short hand Typing** ஆகிய பாடங்கள்

இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

புதிய பிரிவு ஆரம்பம்:

**10 - 09 - 97**

- நிர்வாகி

[49538]



### இலங்கை மின்சார சபை

### வாகனங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறுவிலை கோரல்

இலங்கை மின்சாரசபையின் ஆக்க வேலைப் பகுதி, யாழ். பிரதேச அலுவலகம் என்பவற்றின் பாவனைக்காக டீசல் மூலம் இயங்கும் / சிறிய ட்ரக் வண்டி / லொறிகள் என்பன, ஒப்பந்த அடிப்படையில் வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

கீழ்க் குறிப்பிட்ட அலுவலகத்தில் மீளளிக்கப்படாத ஐம்பது ரூபாவுக்கு மட்டும் பொது முகாமையாளர், இலங்கை மின்சார சபை, கொழும்பு என்ற பெயரில் காசுக்கட்டளையை / வங்கியாணையை பெற்று அதனைச் செலுத்திப் பெறப்பட்ட கூறுவிலை கோரல் படிவத்தினை நிரப்பி, எனது அலுவலகத்தில் 1997-09-19 ஆம் திகதி அன்றோ அதற்கு முன்போ கையளிக்கப்படல் வேண்டும்.

தேவைப்படும் வாகனங்களின் விவரம்:-

1. திறந்த லொறி 3 தொன்/5 தொன்
2. திறந்த சிறிய ரக ட்ரக் வண்டி 1 — $1\frac{1}{2}$ தொன்

**பிரதிப் பொது முகாமையாளர்**
(வடமாகாணம்)

இலங்கை மின்சார சபை,
536/1, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பே. எண்:- 2238 (யாழ்.)

இலங்கை மின்சார சபை சூழலைத் தக்கவைப்பதற்கும் அதன் அபிவிருத்திக்கும் தன்னை அர்ப்பணம் செய்கிறது.

(சி/1519)



### ஓராண்டு நினைவஞ்சலி

**அமரர் இ. விஜயரட்ணம்**

B. A. (Hons) Dip - in - Ed.

(முன்னாள் அதிபர், யா/ தேவரையாளி இந்துக்கல்லூரி, கரவெட்டி, உதவிக் கல்விப் பணிப்பாளர், திட்டமிடல் பிரிவு கோட்டக்கல்வி அலுவலகம், பருத்தித்துறை.)

மண்ணில்: **02 - 04 - 1941**

விண்ணில்: **21 - 08 - 1996**

பாசத்தின் ஒளிவிளக்காய் எமைப் பார்த்து நின்ற அப்பாவே! - இன்று நேசமற்ற குழந்தைகளாய் தினம் நினைந்துருகி வாடுகின்றோம் - வருடம் ஒன்று கடந்தாலும் அப்பா மனம் விட்டுக் கடக்கவில்லை வேதனையின் விளிம்பில் நின்று வேளை தோறும் வெதும்புகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்.

நட்சத்திரபவனம்,
அல்வாய்.

(49543)


## வாளிமலசல கூட சேவை நிறுத்தம்

பருத்தித்துறை நகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் இம்மாதம் 30 ஆம் திகதியுடன் வாளிமல கூட சேவை நிறுத்தப்படவிருக்கின்றது. (இ-109)


### சித்தி விநாயகர் கல்விக் கழகம்

கைதடி

**Spoken English**

by:

**BRITTO**

ஆரம்பம்: **10-09-97**

புதன் 3.00 p.m

திங்கள், வெள்ளி

மாலை 3 மணி

நிர்வாகி

பொன். சிவகரன்

(49533)



### புலமைப் பரிசில் 1998

பயிற்சிப் பரீட்சை -01

14—09—97

(2ஆம் ஞாயிறு)

பயிற்சிப் பரீட்சை - 02

28—09—97

(4ஆம் ஞாயிறு)

காலை 8.30 மணிக்கும்

1.00 மணிக்கும்

(புதியநேரம்)

மேலதிக விவரங்களுக்கு: எமது முகவர்களுடனோ அல்லது

**BOND Institutes**

58A, Stanley Road,
Jaffna.

(49520)



### EESAN Institute,

KONDAVIL.

**Spoken English**

BY:

**BRITTO**

Commencing on 09-09-97 at 4 P.M

(49524)


பருத்தித்துறைப் பகுதி

## இளைஞர்களுக்கு பயிற்சியும் ஊக்குவிப்பும்

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள எட்டு கிராம சேவை அலுவலர் பகுதிகளை உள்ளடக்கிய கொத்தணியிலிருந்து தெரிவாகும் இளைஞர், யுவதிகளுக்கு வருமானம் பெறுவதற்கு வழிகாட்டும் முகமாக பயிற்சியும் ஊக்குவிப்பும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தகவலை பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி தெரிவித்தார்.

யூ. என். டி. பி. என்னும் அமைப்பின் ஊடாக இதற்கென 1 கோடி 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடும் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள எட்டு கிராம சேவை அலுவலர் பகுதிகளைக் கொண்ட ஒரு கொத்தணியாக இது அமையும். அக் கொத்தணியிலிருந்து பத்து இளைஞர்களும், இருபது யுவதிகளும் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தையல் வேலை, பன்னவேலை, தச்சுவேலை, நெசவுவேலை போன்ற துறைகளில் பயிற்சி அளிப்பதுடன், அவர்களுக்கு தொழிலை ஆரம்பிக்க ஊககுவிப்பும் வழங்கப்படும். இப்படி அவர் மேலும் கூறினார். (இ-109)

## தீவுப் பகுதியின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ரூ. 68 லட்சம்

யாழ்ப்பாணம். செப். 9

பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத்திட்ட ஒதுக்கீட்டின் கீழ் தீவுப்பகுதிக்கு 68 லட்சம் ரூபாவை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒதுக்கியுள்ளனர்.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் -

ப. நோ. கூ. சங்க திருத்த வேலைக்கு 6 லட்சம் ரூபாவும் நெடுந்தீவு பிரதேச செயலகம், பிரதேசசபை ஆகியவற்றுக்கு நூல் கொள்வனவு, ரி.வி.கொள்வனவு ஆகியவற்றுக்கு ஒரு லட்ச ரூபாவும், நெடுந்தீவு நீர்ப்பாசன திட்டத்துக்கு 4 லட்சத்து 25ஆயிரம் ரூபாவும், நெடுந்தீவு பிரதேச செயலகபணிக்கு 39 ஆயிரத்து 750 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன,

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் –

குறிகாட்டுவான் பயணிகள் தங்குமடம் அமைக்க 6 லட்சம் ரூபாவும், உரக்களஞ்சியம் திருத்த 2 லட்சம் ரூபாவும் கமநலசேவை துருசு திருத்த 2 லட்சம் ரூபாவும், வேலணை பிரதேச செயலக செலவுக்கு 30 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில்-

ஊர்காவற்றுறை – காரைநகர் இறங்குதுறையைத் திருத்த 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், ''தேவரதம்'' படகைத் திருத்த ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும், 'குமுதினி' படகைத் திருத்த ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், ஒளிவில்வீதிதிருத்த 4 லட்சம் ரூபாவும், ஊர்காவற்றுறை நூலகம் திருத்த 5 லட்சம் ரூபாவும், புத்தகக் கொள்வனவுக்கு 2 லட்சம் ரூபாவும்திறந்தவெளி அரங்கு திருத்த ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபாவும், அனலைதீவு முத்தமிழ் மன்ற கட்டடம் திருத்த ஒரு லட்சம் ரூபாவும், சுருவில் குறுங்கடல் அமைக்க3 லட்சம் ரூபாவும், அரணை வண்ணாங்குளம் புனரமைக்க 2 லட்சம் ரூபாவும், ஊர்காவற்றுறையில் தண்ணீர்த்தொட்டி அமைக்க 3 லட்சம் ரூபாவும், பௌசர் கொள்வனவு செய்ய 6 லட்சம் ரூபாவும், குடி தண்ணீர் விநியோகத்துக்கு 2 லட்சம் ரூபாவும், காரைநகர் உப அலுவலகம் திருத்த மற்றும் நிர்வாக செலவுக்கு 4 லட்சத்து 28 ஆயிரத்து 250 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது, (இ-3)

## பாராட்டு விழா

யாழ்ப்பாணம், செப். 9

சமய, சமூகத்தொண்டரும், சமாதான நீதிபதியுமான சி. சி. வரதராஜாவுக்கு அறுபது வயது பூர்த்தியாவதையொட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு நல்லை ஆதீனத்தில் ஓய்வு பெற்ற அதிபர் கா. கணேசதாசன் தலைமையில் பாராட்டு விழா நடைபெறவிருக்கிறது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

பலர் பாராட்டுரைகள் வழங்குவர்.

பொன்னாடை போர்த்தி பொற்கிழியும் வழங்கப்படும். (இ-3)


### சேவை நலன் பாராட்டு விழா

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும்,
கொழும்புத்துறையைப் புகுந்த இடமாகக் கொண்டு
60 ஆண்டு அகவையை பூர்த்தி செய்து,
அனுஷ நட்சத்திரத் தினத்தில் 61ஆவது வயதில்
காலடியெடுத்து வைக்கும் சமய, சமூக சேவையாளர்

**சைவத்திரு. சி. சி. வரதராசா ச. நீ.**

அவர்களுக்கு

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை,
உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
(இலங்கைக் கிளை),
யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம்
இவை மூன்றும் கூட்டாக இணைந்து நடத்தும்
பாராட்டு விழா

இடம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபம்

காலம்; **09-09-1997** செவ்வாய்க்கிழமை
பிற்பகல் 2 - 30 மணி

தலைவர்: சமூகஜோதி திரு. கா. கணேசதாசன்
(ஓய்வு பெற்ற அதிபர்)

ஆசியுரை: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்

விளம்பர அன்பளிப்பு:-

**லிங்கம் கிறீம் ஹவுஸ்**

இல. 119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(49547)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிவுக்குழு அடுத்த மாதம் கூடி இறுதி அறிக்கையைத் தயாரிக்கும்

கொழும்பு, செப். 9

''அதிகாரப் பரவலாக்கல் குறித்து ஆராயும் நாடாளு மன்றத் தெரிவுக்குழு அடுத்த மாத முற்பகுதியில் கூடும். அக்கூட்டத்தில் பெரும் பான்மை உறுப்பினர்கள் அங் கீகரிக்கும் விடயங்கள் கொண் டதாகத் தயாரிக்கப்படும் அறிக்கை அடுத்த மாத இறுதி யில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.''

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஜேர்மன் தூத ராகப் பொறுப்பேற்றுள்ள கில்மட் தயான் ஜெடிக்கைக் கௌரவிக்கும் வகையில் இந் தியத் தூதுவர் நரேஷ் தயாள் ஏற்பாடு செய்த விருந்தில் பேசுகையில் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விருந்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வம், ஐ.தே. கட்சி எம்.பியான டிரோன் பெர்னாண்டோ ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் அங்கீகரிக்கும் விடயங்கள் நாடாளுமன்றத் தில் அறிக்கை வடிவில் சமர்ப் பிக்கப்படும்.

அந்த பெரும்பான்மையான உறுப்பினர்களின் கையொப் பம் பெறப்படமாட்டாது. ஜனவரி மாதம் வரை நடை பெறும் விவாதத்தில் அவர் கள் உரையாற்றுவர் என்றும் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

''இந்த அறிக்கை வெளிவர முன்னர் வடக்கு — கிழக்கு இணைப்புக் குறித்து இறுதி முடிவு எடுக்கப்பட்டுவிடும். என்னதான் நடந்தாலும் ஒக் ரோபர் இறுதிக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் அதிகா ரப்பரவலாக்கல் நகல் சமர்ப் பிக்கப்படும்'' என்றும் அமைச் சர் மேலும் தெரிவித்தார்.

''இனப்பிரச்சினை விடயத் தில் அவ்வப்போது ஏற்படும் முன்னேற்றம் குறித்து இந்திய அரசுக்கு இலங்கை அறிவித் தால் போதுமானது'' என்று இந்தியத் தூதுவர் நரேஷ் தயாள் தெரிவித்தார்.

(இ-150-3)

## விமான விபத்தில் இலங்கையரும் பலி!

கொழும்பு, செப். 9

மலேசியாவின் போர் ணியோத் தீவில் றோயல் புரூனை விமானமொன்று கடந்த சனியன்று இரவு விழுந்து நொருங்கியதில் விமானத்தில் இருந்த பத்துப் பேரும் கொல்லப்பட்டனர்.

இறந்தவர்களில் ஒருவர் இலங்கையைச் சேர்ந்த டீ.பி. மெண்டிஸ் எனத் தெரிவிக்கப் பட்டது.

விமானம் மரங்களில் மோதியதாலேயே விழுந்து நொருங்கியதாகக் கூறப்படு கின்றது. (இ)

## பல்கலைக்கழக பட்டமளிப்பு

யாழ். பல்கலைக்கழக 16 ஆவது பட்டமளிப்பு விழா கடந்த சனியன்று மிகச் சிறப் பாக நடைபெற்றது.

பல்கலைக்கழக துணைவேந் தர் பேராசிரியர் பொ. பால சுந்தரம்பிள்ளை மற்றும் பிர முகர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு கைலாச பதி கலையரங்கில் பட்ட மளிப்பு இடம்பெற்றது.

மூன்று அமர்வுகளாக இடம் பெற்ற இப்பட்டமளிப்பு விழாவில் ஆயிரத்து 72 பேர் பட்டங்களைப் பெற்றனர்.

ஏராளமானவர்கள் இவ் வைபவத்தில் கலந்து கொண் டனர். (இ-3)

## தேடுதலில் ஆயுதங்கள் மீட்பு எனத் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் புல்லாவெளி என்னும் இடத் தில் கடந்த சனிக்கிழமை பகல் வேளையில் படையினர் மேற்கொண்ட தேடுதலில் ரி 56 ரகத்துப்பாக்கி ஒன்று கிரனேட் நான்கு, 4 அருள் கைக்குண்டுகள் மற்றும் ஒரு றேடியோ ஆகியவற்றைக் கைப்பற்றியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அதே நேரம் — அதே தினம் கிளிநொச்சிமாவட்டத் தில் பொத்துநாகம் என் னும் இடத்தில் படையினர் சீருடைகள் உட்பட பல பொருள்களைக் கைப்பற்றி னர் (இ-3)

## விவசாயிகளைக் காப்புறுதி செய்யுமாறு அறிவுறுத்து

இவ்வருடம் பெரும்போகத் துக்கான நெல்லை விவசாயி கள் ஒக்ரோபர் 30 ஆம் திக திக்குள் விதைக்க வேண்டும் எனவும்—

அவ்வாறு நெல் விதைத்த பின்னர் அவற்றுக்கு ஏற்படும் அழிவுகளில் இருந்து பாது காப்புப் பெறுவதற்காக கட் டாயமாக எல்லா விவசாயி களும் நவம்பர் 30 ஆம் திக திக்கு முன்னதாக விவசாயக் காப்புறுதி செய்து கொள்ள வேண்டும் என்றும்— உடுவில் கமநல கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் பொ. குகநாதன் தெரிவித் துள்ளார்.

கந்தரோடை கிராம சேவையாளர் பிரிவு விவசாயி கள் சம்மேளனத்தினருட னான கலந்துரையாடல் ஒன் றின் போதே மேற்கண்ட வாறு அவர் இதனைத் தெரிவித்தார்.

சுமார் நாற்பதிற்கும் அதிக மான விவசாயிகள் இக் கூட் டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கமக்காரர் ஓய் வூதியம் பற்றியும், கட்டாக் காலி கால்நடைகள் பிரச் சினை பற்றியும் கலந்துரை யாடப்பட்டது.

கட்டாக்காலி கால் நடை களால் குடாநாட்டில் பெரும் பாதிப்பு ஏற்படுவதாக கூறிய பெரும்பாக உத்தியோகத்தர், விவசாய சம்மேளனங்களூ டாக இப்பிரச்சினையை தீர்க்க நடவடிக்கை எடுக்க உள்ளதாகத் தெரிவித்தார்.

கட்டாக்காலி கால்நடைச் சொந்தக்காரர்களிடமிருந்து தண்டப்பணம், பிடி கூலியாக நூறு ரூபா மாடுகளுக்கும், 50 ரூபா ஆடுகளுக்கும் அற விடப்படும் எனவும் — 72 மணித்தியாலத்துக்குள் உரி மையாளர் உரிமை கோர வேண்டுமெனவும்—

இக்கால உணவு, பராம ரிப்பு செலவுகளுக்காக மாடு களுக்கு 20 ரூபாவும், ஆடு களுக்கு 10 ரூபாவும் அற விடப்படும் எனவும்—

உரிமை கோராதவிடத்து அவை ஏலத்தில் விடப்படும். தண்டப்பணமும், பராமரிப்பு செலவும் ஈடு செய்யப்படுமெ னவும் — பெரும்பாக உத்தி யோகத்தர் எடுத்துரைத் தார்.

கந்தரோடை கிராம சேவையாளர் திருநாவுக்கரசு வும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டார். (இ-152)

## பருத்தித்துறை வங்கியை இடம் மாற்றக் கோரிக்கை

நெல்லியடி, செப். 9

நெல்லியடியில் இயங்கி வரும் பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளையை மீண்டும் பருத்தித்துறையில் இயங்கச் செய்ய உடன் நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை பிரதேச சபை சனசமூக நிலையங்களின் சமாசம், மக்கள் வங்கித் தலைமைப் பீடத்தை கோரியுள்ளது.

பருத்தித்துறையில் வன் செயல்கள் இடம் பெற்ற காலப் பகுதியிலேயே இவ் வங்கி நெல்லியடிக்கு மாற்றப் பட்டிருந்தது.

பருத்தித்துறை மக்கள் வங்கி வாடிக்கையாளர்கள் நெல்லியடியில் இயங்கி வரும் இவ் வங்கியை பருத்தித் துறைக்கு மாற்றும்படி நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்து வருகின்ற போதிலும் மக்கள் வங்கியின் தலைமைப்பீடம் இக்கோரிக் கையை உதாசீனம் செய்து வருகின்றதென்று வங்கி வாடிக்கையாளர்கள் தெரி விக்கின்றனர்.

(இ-109)

## விபத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 9

நுணாவில் சந்தியில் இடம் பெற்ற மோட்டார் சைக் கிள் — சைக்கிள் விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளில் சென்றவரும், மீசாலை வடக் கைச் சேர்ந்தவருமான பொன்னம்பலம் அற்புத ஜெயம் (வயது 43) என்ப வரே காயமடைந்தவரா வார். (இ-15)

## பளைப் பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகள்

பளைப் பிரதேச செயலகத் தின் இவ் வருடத்திற்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டில் இருந்து சில அபிவிருத்தி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இரண்டு லட்சம் ரூபா செல வில் பளை வைத்தியசாலை 'வார்ட்' திருத்த வேலைகள், சுற்று மதில் வேலைகள், ஒரு லட்சம் ரூபா செலவில் பளை பொதுச் சந்தையில் கொல்களம் அமைத்தல், இவற்றுடன் பளை கரவைக் குள வாய்க்கால் திருத்த வேலை, முகமாலை வாய்க் கால் திருத்த வேலை ஆகி யவையே நடைபெறுவதாக பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினர் தெரிவித்தனர்.

(ஐ-117)

## கைதடி முதியோர் இல்லத்துக்கு புதிய ஆலோசனைச் சபை

### வியாழனன்று அங்குரார்ப்பணம்

தென்மராட்சி, செப். 9

கைதடி அரச முதியோர் இல்ல அபிவிருத்திப் பணி களுக்காக ஆலோசனைச் சபை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இச் சபை அங்குரார்ப்பணக் கூட்டம் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு தென்மராட்சி பிர தேச செயலர் பு. சுந்தரப்பிள்ளை தலைமையில் முதியோர் இல்ல மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆலோசனைச் சபைக்கு யாழ். குடாநாட்டில் உள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்தும் தலா ஒருவர் வீதம் 14 பேர் தெரிவு செய்யப்படவுள்ளதால் சமூக சேவை யில் ஈடுபாடுள்ளவர்கள் உட்பட பொது நலன் விரும்பிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளை இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி பிரதேச செயலகம் கோரியுள்ளது.

(ஐ-117)

## செய்திச் சாரம்

### மலசல கூடம் அமைப்பு

நெல்லியடி, செப். 9

'யுனிசெவ் உதவித்திட் டத்தின் கீழ் ஐந்து அறை களைக் கொண்ட மூன்று மலசல கூடங்களைப் பருத் தித்துறை 3 ஆம் குறுக்குத் தெருவில் நிறுவுவதற்கு பருத்தித்துறை நகரசபை நடவடிக்கை மேற் கொண் டுள்ளது.

இதேவேளை பருத்தித் துறை நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் வாளி மலசல கூடங்களை நீரடைப்பு மல சல கூடமாக மாற்றியமைப் போருக்கு முதற் கட்டமாக தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது.

(ஐ-109)

### தையல் இயந்திரம்

நெல்லியடி, செப். 9

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில், பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கு அளிக்கப் படும் புனர்வாழ்வுத் திட்டத் தின் கீழ் கடந்த வாரம் எட் டுப் பேருக்கு தையல் இயந் திரங்கள் வழங்கப்பட்டன.

பருத்தித்துறை கி. சே. அலுவலர் பிரிவில் இரு வரும் —

புலோலி மத்தி கி, அ. பிரி வில் இருவரும் —

புலோலி மேற்கு கி. அ. பிரிவில் ஒருவரும் —

புலோலி கிழக்கு கி. அ. பிரிவில் ஒருவரும் –

வியாபாரி மூலை கி. அ. பிரிவில் ஒருவரும் —

துன்னாலை கி.அ. பிரிவில் ஒருவரும் [illegible] னர். (இ-109)

### சேவையிலிருந்த ஒரு பஸ்ஸும் பழுது

நெடுந்தீவு, செப. 9

நெடுந்தீவில் உள்ளூர், போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வந்த ஒரேயொரு பஸ்ஸும் பழுதடைந்துள்ள தால், படகுப் பயணிகளும் நோயாளர்கள் மற்றும் பாட சாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்,

(இ.111)

### 113ஆவது வயதில் மரணம்

நெடுந்தீவு, செப். 9

113 வயதுடைய முதியவர் ஒருவர் நெடுந்தீவில் கால மானார்.

நெடுந்தீவு மேற்கு வெட் டக்காடு பகுதியைச் சேர்ந்த காசி ஐயம்பிள்ளை என்ற இவர் இறக்கும் வரை ஆரோக்கியமாகவே காணப் பட்டார் என்று தெரிவிக்கப் பட்டது. (இ-111

### சிறுவர் பாடசாலை திறப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 9

நாவற்குழிச் சந்தியருகில் கண்டி வீதியில் சிறுவர் பாட சாலை ஒன்று திறந்து வைக் கப்பட்டுள்ளது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தென்மராட்சி அமைப் பாளர் ஐயா இதனைத் திறந்து வைத்தார். நாவற் குழி கிராம சேவகர் தலை மையில் இந்த வைபவம் நடை பெற்றது.

காலையில் வகுப்பும், மாலையில் ரியூஷனும் வழங்க ஏற்பாடு செய்து கொடுக்கப் பட்டுள்ளன.

இப்பாடசாலையின் ஆசி ரியைகளுக்கான சம்பளத்தை ஈ.பி.டி.பி தனது கட்சி நிதியிலிருந்து வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ)

### பதிவு செய்யாத மருந்து விற்பனை நிலையங்கள்

யாழ்ப்பாணம், செப். 9

யாழ்ப்பாணப் பகுதிகளில் இயங்கிவரும் 62 ஆங்கில மருந்து விற்பனை நிலையங் களில் 5 விற்பனை நிலையங் களே பதிவு செய்யப்பட்டுள் ளன.

ஏனைய மருந்து விற்பனை நிலையங்கள் பதிவு செய்யப் படாத நிலையிலேயே இயங்கி வருகின்றன.

இத்தகைய மருந்தகங்களில் மருந்து விற்பனையில் ஈடு பட்டுவரும், மருந்து விற்பனை யாளர்கள் அதற்குரிய கல்வித் தராதரம் இல்லாதவர்களாக இருப்பதாகவும் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த காலங் களில் பயிற்சி பெற்ற 40 பேர் வேலையற்ற நிலையில் உள் ளனர்.

இந்த விடயம் பற்றி நேற்று யாழ். செயலகத்தில் இடம் பெற்ற புனர்வாழ்வு ஆலோ சனைக் குழு, நுகர்வோர் பாதுகாப்புச்சபைச் சங்கங் களுக் கிடையிலான கூட்டத் தில் பிரஸ்தாபிக்கப்பட்டது

(இ - 15)

### மீண்டும் திறக்க நடவடிக்கை

நல்லூர், செப். 9

யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் எரி பொருள் விற்பனை நிலை யத்தை மீண்டும் திறக்க நட வடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

இதே போன்று யாழ்ப் பாணத்தில் உள்ள ஏனைய எரிபொருள் விற்பனை நிலை யங்களையும் திறக்க ஏற்பாடு கள் மேற்கொள்ளப்படவுள் ளன.

(இ-103)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பாவித்த கதிரைகள, மேசைகள், அலுமாரி, குளிர் சாதனப்பெட்டி என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் 126/10, யாழ். இந்து மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [49541]

### தவறிவிட்டது

கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி சந்தை மரக்கறிப் பகுதியில் 1½ பவுண் சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி செல்வம் மரக்கறிக் கடையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [சி/1513]

திருமதி ப. பர்வதபத்தினி தேவி என்பவரது தேசிய அடையாள அட்டை இல. 467052438V விசேட அடையாளஅட்டை ஆகியன ஆஸ்பத்திரி வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். திரு. ப. பொன்னையா, விவசாய பயிற்சிப் பண்ணை, திருநெல்வேலி. [49526]

188/2, கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த ஸ்ரீசங்கர் ஆஞ்சலா என்பவரது இல. 0902032891 கொண்ட விசேட அடையாள அட்டை தட்டாதெரு சந்திக்கும்,சிவன் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். புதிய நதியா, இல. 103, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (49539)

### தேவை

மிதிவண்டி திருத்துநர் (முழு பாஸ்) அல்லது ஓரளவு திருத்தக் கூடியவர் மற்றும் பழகுநர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:இல.180, நாவலர்வீதி (மிருக வைத்தியர்கறாஜ்), யாழ்ப்பாணம் அல்லது 302/1, நாவலர்வீதி, ஆனைப்பந்தி உபதபாற் கந்தோர், யாழ்ப்பாணம். [49532]

எமது காரியாலயத்தில் வேலை செய்வதற்கு ஆங்கில, தமிழ் அறிவுள்ள பெண் பிள்ளைகள் தேவை. தொடர்பு: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [49536]

### நாடகம் எழுதுவது எப்படி

07.09.97 தினக்குரலில் தமிழ்த்தினப்போட்டி சிறுகதை வாசித்தீர்களா? அந்தச் சிறுகதையை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1. நாடகம் எழுதுவதுஎப்படி? 50/- 2.அக்கரைச்சீமையில் நாவல் 25/- [49535]

# ஓராண்டு நினைவஞ்சலி



## செல்வி ரஜனி செல்வரத்தினம்

(யாழ். இந்து மகளிர் கல்லூரி A/L 1995 வர்த்தகப் பிரிவு)

மலர்வு: **19 - 10 - 1976**

உதிர்வு: **21 - 08 - 1996**

## ஆண்டுத் திதி: 09 - 09 - 1997

அன்பு மகளே!
அன்பின் திருவுருவே; பாசத்தின் ஒளிச் சுடரே!
எங்கள் அருமை குல விளக்கே!
பூத்து, காய்த்து, கனிவாய் என்றிருந்தோம்
தீராத நோயொன்று நொடிப் பொழுதில்
வருமென்று — நினைத்தோமா?
பார்த்த விழிகள் மூடவில்லை;
பாதியிலே எம்மை விட்டுப் பிரிந்து
ஓராண்டு சென்றதம்மா;
இனி நாம் எங்கு காண்போம்?
உனது பிரிவால் எமதுள்ளம் இருளாகி விட்டதம்மா
நாம் செய்வதறியா திணறுகின்றோம் —
தவிக்கின்றோம்.

என்றும் உமது சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இன்று (09 - 09 - 97) செவ்வாய்க்கிழமை நடைபெறும் ஆண்டுத் திதியிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,

பிரிவால் துயருறும்:

தந்தை இ. செல்வரத்தினம், (அம்பாள் மரக்காலை)
தாய் செ, மங்கையர்க்கரசி, (கமலா)
சகோதரம் செ. ரஜனிகாந்,
செ.ரஜனிதரன்,
சகோதரி செ. தர்சினி,
உறவினர்.

இல. 50, 5ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(49516)

# வீடுகளில் கசிப்பு விற்பனை

தென்மராட்சி, செப். 9

யாழ். மாவட்ட மதுவரிப் பகுதியினர் கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கப் பரிசோதகர்கள், தென்மராட்சி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியினர் ஆகியோர் இணைந்து கொடிகாமம் சங்க எல்லைக்குட்பட்ட இடைக்குறிச்சி, முத்தட்டு, கொடிகாமம், தவசிகுளம் ஆசிய பகுதிகளில் நடத்தியதிடீர்ப்பரிசோதனையில் பல வீடுகளில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தி விற்பனை செய்ததையும்,மற்றும் அனுமதியின்றி கள் விற்பனை செய்ததையும் கண்டுபிடித்தனர்.

கசிப்பு உற்பத்தி உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் கசிப்பு, அனுமதியற்ற கள் ஆகியவை உற்பத்தி, விற்பனை செய்தோர் மீது சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. (ஐ-117)

# 3-வது ஆண்டுமறைவு நினைவு

## (இன்று 09-09-1997)

**கலாகேசரி ஆ. தம்பித்துரை**
**நினைவு கூரல் பெருவிழா**
**குரும்பசிட்டி சன்மார்க்க சபை.**

இடம்: இராமநாதன் கல்லூரி மண்டபம், மருதனார்மடம்.

காலம்: 14-9-97 ஞாயிறு காலை 9-30 மணி (புதிய நேரம்)

தலைவர்: கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை

★ நிகழ்வுகள் ★

ஆரம்ப உரைகள்:
**திரு. அ. தற்பரானந்தன்**
(பிரதிக் கல்விப்பணிப்பாளர், உடுவில் கோட்டம்)
**திரு. ஆ, கமலநாதன்**
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், தெல்லிப்பழைக் கோட்டம்)

தலைவர் உரை:

விசேட உரைகள்:
**'கலைப்படைப்புக்களும் அடிப்படை அம்சங்களும்'**
(உடன் படங்கள் வரைந்து விளக்கம்)
**ஓவியமணி செ. வரதராஜன்**
(சேவைக் கால ஆலோசகர், சித்திரம், கோப்பாய் உடுவில் கல்விக்கோட்டம்)
**நவீன ஓவியங்கள் - ஒரு பார்வை**
**திரு. கோ. கைலாசநாதன்**
(விசேட இணைப்பாளர் - சித்திரம் - வலயம்1)

★ ஆர்வலர்கள் அனைவரையும் அழைக்கின்றோம் ★

**பொ. பாலகுமார்,**
பொதுச்செயலாளர்.

(49508)

# பயிற்சி

அறவழிக் குழுவின் சுய தொழிற் பயிற்சித் திட்டத்தின் கீழ் பின்வரும் பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சிகள்**

1. தமிழ்/ ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து
2. ஆங்கில மொழி
3. பனங் கைப்பணி
4. தையல் இயந்திர இயக்குநர்
5. தையல் இயந்திர திருத்துனர்
6. தட்டச்சு இயந்திர திருத்துனர்
7. நீரிறைக்கும் இயந்திர திருத்துனர்
8. மோட்டார், சைக்கிள் திருத்துனர்
9. துவிச்சக்கர வண்டி திருத்துனர் (மகளிர்)
10. மின் வயர் பொருத்துதல்

1. மேற் குறிப்பிட்ட பயிற்சிகளுள் முதல் இரு பயிற்சிகளைத் தவிர ஏனைய பயிற்சி பெறுபவர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் உதவு தொகை வழங்கப்படும்.
2. அறவழி திட்டக் கிராமங்களில் இருந்து விண்ணப்பம் செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அறவழி மழலைகள், கல்விப் பூங்கா ஆசிரியைகள் ஊடாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. போதிய பயிற்சியாளர்கள் இணையும் பட்சத்திலேயே பயிற்சிகள் நடைபெறும்.
4. தென்மராட்சிப் பிரிவு விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தினை தலைவர், அறவழிப் போராட்டக் குழு, 29, கண்டி வீதி, கைதடி நுணாவில் சாவகச்சேரி, என முகவரியிட்டும்.

வடமராட்சிப் பிரிவு விண்ணப்பதாரிகள் தலைவர், அறவழிப் போராட்டக் குழு, பிரதேச செயலகம், மகா வித்தியாலய வீதி, நெல்லியடி என்னும் முகவரியிட்டும் 25 - 09 - 97 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும்.

மேலதிக விவரங்கள் தேவைப்படின் குறிப்பிட்ட செயலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்.
**வீ. ஜி. தங்கவேல்.**
**அறவழிப் போராட்டக்குழு**

(சி-1501)


# றெனி மூக்குக் கண்ணாடி அகம்

**(RENNY OPTICIANS)**

உங்கள் கண்களை சரியாகப் பரிசோதித்து கண்ணாடிகளை உடன் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்:

★ **றெனி மூக்குக் கண்ணாடி அகம்** ★

**இல. 288, நாவலர் வீதி,**
(யாழ். தனியார் வைத்திய சாலைக்கு முன்பாக)
**ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.**

RENNY OPTICIANS

**கண்டி வீதி,**
(சா/பிரதேச செயலகம் முன்பாக)
சாவகச்சேரி.

**இல. 19/3, கொழும்புத்துறை ஒழுங்கை,**
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அண்மையில்)
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(49534)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உ தயன்

## குழப்பிவிடும் போக்கில்...

இனப் பிரச்சினைத் தீர்வுக்கென அரசாங்கம் அதிகாரப் பரவல் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது. அதனை எவ்வாறேனும் நிறைவேற்றிவிடுவது என்ற தோரணையில் ஜனாதிபதியும், அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸும், ஏனைய சில அமைச்சர்களும் அறிவிப்புகளைச் செய்து வருகின்றனர்.

அதிகாரப் பரவல் திட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிச் சட்டமாக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு தேவை. ஆனால், அக்கட்சியோ தனது ஆதரவை வழங்கும் என்று நம்புமளவுக்கு இன்னும் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்பு வழங்காவிடில், சர்வஜன வாக்கெடுப்பு மற்றும் நடைமுறையில் உள்ள அரசமைப்பைத் தூக்கி எறிவது போன்ற புரட்சிகர நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக ஜனாதிபதி சந்திரிகா கூறிவருகிறார்.

இதே வேளை, அரசின் அதிகாரப் பரவல் தீர்வை எதிர்க்கும், அது நிறைவேறாமல் இடையூறு விளைவிக்கும் நோக்குடன் முனைப்பாகச் செயற்படும் சக்திகள் தென்னிலங்கையில் உள்ளன, புதிதாகக் கூட்டுச் சேரவும் உள்ளன.

ஒற்றையாட்சியைப் பாதுகாப்பது, ஜனநாயகத்தைப் பாதுகாப்பது என்ற குரலுடன் அனேகமாக பேரினவாதிகளே அதிகாரப் பரவலுக்கு எதிரான அணியினராக ஒன்று திரள்கின்றனர்.

1994 ஆம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தல் முடிவுகள் இத்தகையோருக்கு தென்னிலங்கை மக்கள் மத்தியில் ஆதரவில்லை என்பதனைத் தொட்டுக் காட்டியதாகக் கருதப்படுகிறது.

ஆனால், அத்தகைய நிலை நிரந்தரமானது அல்ல என்பது இப்போது புலனாகின்றது. மார்கா நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பு, தமிழர்களுக்கு நியாயமான உரிமைகள் கிடைப்பதனை விரும்பாத பேரினவாத சக்திகள் சிங்கள மக்களிடையே மீண்டும் செல்வாக்குப் பெற்று வருவதனைக் கோடிட்டுக் காட்டுகிறது.

தமிழர் பிரச்சினைக்கு நியாயமான, நீதியான தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதில் அரசு, உளமார்ந்த அக்கறை கொண்டிருப்பின், பதவிக்கு வந்த ஒரு வருட காலத்திற்குள் (ஆகக் கூடியது) அதனைச் செய்திருக்க வேண்டும். மூன்று வருட கால இடைவெளி குழப்பம் காய்ச்சிகளுக்குச் சாதகமாகிவிட்டது. அதனைப் பயன்படுத்தி அவர்கள் உறங்காது பணியாற்றியதால், அதிகாரப் பரவலாக்கலை எதிர்க்கவென்றே தெற்கில் புதிய முன்னணி ஒன்று உதயமாகும் அளவுக்குத் தள நிலைமை மாறியுள்ளது.

காற்றுள்ள போதே தூற்றுவது இலகுவானது. ஆறப் போடப்படும் விடயம், பின்தள்ளப்பட்டுச் சென்று, கைகூடாமல் போவது அனுபவம். உரிய வேளையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு முன்னெடுக்கப்பட்டிருந்தால் காரியம் சுமுகமாகியிருக்கலாம்.

இனிமேல் அரசு தனது தீர்வுத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வது—சிங்கள மக்களின் ஆதரவைத் திரட்டுவது—என்பது மிகவும் சிரமமான காரியமாகவே இருக்கும். பலகோண எதிர்ப்புகளையும், தடைகளையும், தடங்களையும், அரசியல் ஆபத்துக்களையும் எதிர்கொள்ள நேரிடும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பது குழப்பப்படும் போக்கில் நகர்கிறது என்பதே இன்றைய நிலை.

# யாழ். நகரில் ஒருவழிப்பாதை நடை முறை மீண்டும் அமுல்

யாழ்ப்பாணம், செப் .9

யாழ். நகரத்தில் போக்குவரத்து நெருக்கடியைத் தவிர்க்கும் வகையில் புதிய வீதி ஒழுங்கு நடைமுறைகள் நேற்று அமுலுக்கு வந்துள்ளன.

வெள்ளை நிறச் சீருடை அணிந்த யாழ். மாநகர சபை ஊழியர்கள் வீதி ஒழுங்கை நடை முறைப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தனர்.

இப் புதிய நடைமுறையின்படி நகரத்துக்குள் பிரவேசிக்கும் சகல வாகனங்களும் ஸ்ரான்லி வீதியில் இருந்து கஸ்தூரியார் வீதியூடாகவும் —

நகரில் இருந்து வெளிச் செல்லும் வாகனங்கள் காங்கேசன்துறை வீதியூடாகவும் — அனுமதிக்கப்படும்.

கஸ்தூரியார் வீதியும், காங்கேசன்துறை வீதியும் ஒரு வழிப்பாதையாக இருக்கும்.

அத்துடன் போக்குவரத்து வாகனங்களை நிறுத்த விசேட தரிப்பிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

மினிபஸ் இனிமேல் மின்சார நிலைய வீதியில் இருந்து ஸ்ரான்லி வீதிக்குச் செல்லும் பாதையில் நிறுத்தப்படும்.

நகரப் பகுதியில் உள்ள வீதிகளில் வாகனங்களை நிறுத்தி பொருள்கள் இறக்கவும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

காலை 7 மணிக்கு முன்பும் மாலை 4 மணிக்கு பின்புமே வாகனங்கள் தரித்து நின்று பொருள்களை ஏற்றவோ, இறக்கவோ அனுமதிக்கப்படும்.

(இ-3-135)

## தொண்டர் ஆசிரியர் ஜனாதிபதியை சந்திப்பர்

அச்சுவேலி, செப். 9

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள் ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளனர்.

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்களின் நியமனத்தை உறுதிப் படுத்துமாறு கோரி அது தொடர்பாக தமது நிலைப்பாட்டை ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறுவதே இவர்களின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-11)

## பஸ் ஊழியர் சம்பளம் இன்னும் இல்லை

திருநெல்வேலி, செப். 9

வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களின் ஓகஸ்ட் மாதச் சம்பளம் நேற்று வரை வழங்கப்படவில்லை என்று ஊழியர்கள் தெரிவித்தனர்.

(ஐ-135)

## மீனவர்களுக்கு காக்கைதீவில் இளைப்பாற்று மண்டபம்

யாழ்ப்பாணம், செப். 9

காங்கை தீவில் உள்ள மீனவர் இளைப்பாற்று மண்டபம் தற்போது புனரமைக்கப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அதிகாரி எஸ். ஏ. ஜோசப் தெரிவித்தார்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் இதற்கென 5 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். அத்துடன் அங்குள்ள இரு மலசல கூடங்களும் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

ஆனைக்கோட்டையில் இருந்து மீன்பிடித் தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் இந்த இளைப்பாற்று மண்டபத்தில் தங்கி ஓய்வெடுத்துச் செல்வர். (இ-5)

## வாயிலிருந்த நெல்லி விதை புரைக்கேறி சிறுமி மரணம்

யாழ்ப்பாணம், செப். 9

வாயினுள் இருந்த நெல்லி விதை புரைக்கேறி இரண்டரை வயதுச் சிறுமி உயிரிழந்தார்.

உடுவிலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில், காங்கேசன்துறையில் இருந்து இடம்பெயர்ந்த விறைட்டிங் ஜோய் நிலோஜினி என்ற சிறுமியே மரணமானார்.

சிறுபிள்ளைகளுடன் சேர்ந்து நெல்லிக்காய் சாப்பிட்டு விளையாடிக் கொண்டிருந்தவேளை பக்கத்து வீட்டு நாய் குரைத்து அந்தச் சிறுபிள்ளைகளை விரட்டியதாகக் கூறப்படுகின்றது. மற்றைய பிள்ளைகளுடன் சேர்ந்து வீடு நோக்கி ஓடிய அச்சிறுமி தாயின் மடியில் மூச்சுத் திணறியவாறு விழுந்ததாகவும்—

சில நிமிட நேரத்தில் சுவாசிக்க முடியாது சோர்ந்து மயங்கிவிட்டதாகவும்—

பேச்சு மூச்சற்றிருந்த பிள்ளையை யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வந்தபோது டாக்டரின் பரிசோதனையில் குழந்தை இறந்துவிட்டது தெரியவந்ததாகவும்—

இறந்தவரின் தாயாரால் தெரிவிக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற பிரேத பரிசோதனையின்போது குழந்தையின் சுவாசக்குழாயில் நெல்லி விதை இருந்ததாக, பிரேத பரிசோதனையை மேற்கொண்ட சட்ட வைத்திய அதிகாரியால் தெரிவிக்கப்பட்டது.

சிறுமி வாயினுள் நெல்லி விதையை வைத்திருந்தபடி பயத்தினால் ஓடியபோது வாயினுள் இருந்த நெல்லி விதை சுவாசக் குழாயினுள் சென்று புரைக்கேறி மூச்சுத்திணறி இறந்ததாக சட்ட வைத்திய அதிகாரியினால் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனை, மரண விசாரணை ஆகியவற்றை அடுத்து சடலம் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது.

(உ-15)

## டிங்கிபௌசர் மூலம் குடிதண்ணீர் எடுத்துச் செல்வதற்கு முயற்சி

நெடுந்தீவு, செப். 9

எழுவைதீவு மக்களின் குடி தண்ணீர் கஷ்டத்தை நிவர்த்தி செய்யக் கூடியதாக கடல் மூலம் நீர் எடுத்துச் செல்லக் கூடியதான ''டிங்கி பௌசர்'' ஒன்றைத் தரும்படி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் எழுவைதீவுப் பிரஜைகள் குழுத்தலைவர் க. அகஸ்ரின் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்சமயம் எழுவை தீவு மக்கள் தமது குடி தண்ணீர் தேவைகளுக்காக அனலைதீவு, ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்கு சிறிய படகுகள் மூலம் சென்று அங்கிருந்து குடி தண்ணீரை பிளாஸ்ரிக் கான்களில் எடுத்து வருகின்றனர்.

(இ-111)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் செப். 9

கரவெட்டி கோட்டக்கல்வி அலுவலகப் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3-00 மணி முதல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

15 வயதுப் பிரிவு

★ கம்பர்மலை அ. த. க. பா எதிர் பொன்னம்பலம் வித்தியாலயம்.

★ நெல்லியடி ம. ம. வி, எதிர் விக்னேஸ்வரா.

(இந்த ஆட்டங்கள் கரணவாய் பொன்னம்பலம் ம. ம. வி. மைதானத்தில் நடைபெறும்.)

17 வயதுப் பிரிவு

★ தேவரையாளி இந்து எதிர் கம்பர்மலை அ. த. க. பா.

★ பொன்னம்பலம் ம. ம. வி. எதிர் உடுப்பிட்டி அ, மி.

(இந்த ஆட்டங்கள் நெல்லியடி ம. ம. வி. மைதானத்தில் நடைபெறும்.

★ ★ ★

பருத்தித்துறை கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைப்பந்தாட்டச்சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் கொற்றாவத்தை அ. மி. பாடசாலை மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் வேலாயுதம் ம. வி. மற்றும் தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம் ஆகியவற்றின் 15, 17, வயதுப் பிரிவு அணிகள் மோதவுள்ளன. (உ)

## சுட்டுக் கொலை

நெல்லியடி, செப். 9

அல்வாய் வடக்கு முத்துமாரியம்மன் கோயிலடியில் வாய் பேச முடியாத குடும்பஸ்தர் ஒருவர் இனந் தெரியாத நபர்களினால் நேற்று முன் தினம் இரவு 9 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இராசதுரை ரவீந்திரன் (வயது 41) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

பருத்தித்துறை மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை பிரேதபரிசோதனையையும், உடுப்பிட்டிப் பகுதி திடீர் மரண விசாரணை அதிகாரி வி. நடராஜா மரண விசாரணையையும் மேற்கொண்டனர்.

இறந்தவரின் மனைவியின் சாட்சியத்தை அடுத்து, சடலம் மனைவியிடம் கையளிக்கப்பட்டது. கொலையெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. மேல் விசாரணைகளை பருத்தித்துறை பொலீஸார் மேற்கொண்டுள்ளனர்.

(உ-109)

## மோட்டார் வாகனப் பணிகள் பிரதேச செயலகங்களிலும்

யாழ்ப்பாணம், செப். 9

யாழ். மோட்டார் வாகனத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வந்த சில பணிகளை யாழ். பிரதேச செயலகம் மேற்கொள்ளும்பொருட்டு, அதற்குரிய ஆவணங்கள் நேற்று பிரதேச செயலகத்திடம் கையளிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து யாழ். பிரதேச செயலகம் மோட்டார் வாகனத் திணைக்களப் பணிகளை நேற்று முதல் மேற்கொள்ளத் தொடங்கிவிட்டது என்றும்—

எனினும் புதிதாக வாகனம் பதிவுசெய்தல் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல் என்பன போன்ற சில பணிகள் தொடர்ந்தும் யாழ். செயலகத்தில் உள்ள மோட்டார் வாகனத் திணைக்களத்தினாலேயே மேற்கொள்ளப்படும் என்றும்—

யாழ். பிரதேச செயலகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஜூலை மாதம் 31 ஆம் திகதி யாழ். செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் யாழ். மோட்டார் வாகனத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட சில பணிகளை பிரதேச செயலகங்களுக்கும் விரிவுபடுத்துவதுஎன்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. (உ.5)

## நாளை

**ஆவணி 25**

புதன்கிழமை

**திதி:** அட்டமி

பிற்பகல் 2.06 வரை.

**நட்சத்திரம்:** கேட்டை

பிற்பகல் 3.06 வரை.

ஜயேஷ்டாஷ்டமி

சுபநேரம்: 4.33- 6.03

ராகுகாலம்: 12.03-1 33

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## மலேசிய ஓய்வூதியம்

யாழ். மாவட்டத்தில் மலேசியா, சிங்கப்பூர் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களின் ஓகஸ்ட் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவினால் அந்தந்த வங்கிகளுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டன.

உரியவர்கள் இன்று முதல் வங்கிகளுக்குச் சென்று அவற்றைப் பெற்றுக் கொள்ளலாமென்று தெரிவிக்கப்பட்டது.

## தெல்லிப்பளை மாதாந்த உதவிப் பணம்

யாழ்ப்பாணம், செப். 9

வலி. வடக்கு, தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் புற்றுநோய், காசநோய், தொழுநோய் போன்ற நோய்களுக்கான கொடுப்பனவுகளை இதுவரை உடுவில், இணுவில் தபாலகங்கள் ஊடாகப் பெற்று வந்தவர்கள் அவர்களது ஓகஸ்ட் மாதக் கொடுப்பனவைக் காங்கேசன்துறை வீதி, றொட்டியாலடியில் இயங்கும் காங்கேசன்துறை தபாலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும்

புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி நிறுவியவர் நினைவு தினமும், பரிசளிப்பு விழாவும் நாளை புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அதிபர் வ. ஆறுமுகம் தலைமையில் நடைபெறும்.

புத்தூர் சிவன் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ சாமி சோமசுந்தரக் குருக்கள் ஆசியுரை வழங்குவார்.

பிரதம விருந்தினராக யாழ். வலயம் - 2 கல்விப் பணிப்பாளர் சி. சிவராசாவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். செயலக நிர்வாக அதிகாரி க. இராசதுரை, பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி. இராசையா, கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி ஆ. இராசேந்திரன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்கில் மேலும் 5 வதை கூடங்கள்

## இயங்கியதாகத் தகவல்

கொழும்பு, செப். 9

பட்டலந்த சித்திரவதை முகாம் போன்று கடந்த ஆட்சிக் காலத்தில் இயங்கியதாகக் கூறப்படும் ஐந்துக்கு மேற்பட்ட வதை முகாம்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று சிபாரிசு செய்திருப்பதாகத் தெரியவருகின்றது.

1987 இற்கும் 1990 இற்கும் இடையில் காணாமற்போனதாகக் கூறப்படும் சுமார் 19 ஆயிரம் பேர் குறித்து விசாரணை நடத்திய ஆணைக்குழுவின் அறிக்கையிலேயே இவ்வாறு சிபாரிசு செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

இந்த அறிக்கை கடந்த புதனன்று ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

1987 இற்கும் 1990இற்கும் இடைப்பட்ட காலத்தில் காணாமற்போனோர் தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய ஆயிரத்து 600 பொலீஸார், இராணுவத்தினர் ஆகியோரின் பெயர் விவரங்களும் இந்த அறிக்கையில் குறிப்படப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது. (உ)

## அமெரிக்க..

(முதலாம் பக்கத் தொடர்)

அதன்பின்னர் தென்னாசிய நாடுகளுக்கான தமது விஜயத்தின் முதற்கட்டமாக அண்மையில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் அவர் சென்றிருந்தார்.

அரசியல் விவகாரம், ஆயுதக் களைவு, அமைதிகாத்தல், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஐ.நாவின் விவகாரங்களில் அமெரிக்க வெள்யுறவு அமைச்சின் செயலர் மார்டலின் ஆல்பிறைற்றுடன் இவர் நெருக்கமாகப் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அமெரிக்கப் போரயத்தின் வெளிநாட்டு உறவுகள் தொடர்பான குழுவில் உறுப்பினராகவும் விளங்கினார்.

இலங்கைக்கு அமெரிக்கப் போர்த் தளபாடங்களை ஏற்றுமதி செய்வதைத் தடை செய்யும் அதிகாரபூர்வமான தடை உத்தரவு அமுலில் உள்ள நிலையிலும்—

அமெரிக்காவின் தனியார் நிறுவனம் ஒன்றிடம் இருந்து மூன்று விசைப் படகுகளை இலங்கை அரசு பெற்றுக் கொண்டமை தொடர்பான விவகாரத்தில் வாக்குவாதங்கள் கிளம்பியுள்ள நிலையில்—

அமெரிக்காவின் மூத்த அதிகாரியான கோல் இன்ரபரின் கொழும்பு விஜயம் இடம் பெற்றிருப்பதாக பி.பி.ஸி. தெரிவித்தது. (ஐ)


எமது புதிய வெளியீடு!

கார்த்திக் –விஜயசாந்தி

★ மிஸ்டர் மகாராணி

அடுத்த வெளியீடுகள்!

பார்த்திபன் – ரவுளி

★ அபிமன்யு

ராம்கி – குஷ்பு

★ கல்யாண வைபோகம்

சுப்பஸோ வீடியோ யாழ்ப்பாணம்.

(சி/1523)



New Science Centre

நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

தூய, பிரயோக கணிதம்

(I) புள்ளிவிவரவியல்

(II) தாயங்கள்

(III) தொடைகளும், சார்புகளும்

ஆரம்பம்: 10-09-97 புதன் 3.30 p.m.

ஆசிரியர்: Mr. ஜங்கரன் B. Sc.

குறிப்பு:- இந்நிறுவனம் யாழ். College of Commerce கல்வி நிறுவனத்தில் இயங்குகின்றது.

(49554)


## திருமலையில் ஊர்காவலர் பலி!

யாழ்ப்பாணம், செப். 9

திருகோணமலை மேற்கில் உள்ள கிராமம் ஒன்றில் இருந்த ஊர்காவலர்களின் சோதனைச் சாவடிகள் மீது தமது போராளிகள் நேற்றுக் காலை தாக்குதல் ஒன்றை நடத்தியதாக ''புலிகளின் குரல்'' அறிவித்தது.

இத்தாக்குதலில் ஊர்காவலர் ஒருவர் பலியானார், மற்றும் இரு ஊர்காவலர்கள் காயமடைந்தனர். அவர்களின் ஆயுதங்கள் தங்களால் கைப்பற்றப்பட்டதாகவும் புலிகள் அறிவித்தனர். (உ-164)

## மழைவேண்டி இசை நிகழ்ச்சி

புதுடில்லி செப் 9

மழை வேண்டி இசை நிகழ்ச்சி ஒன்றை விவசாயிகள் நடத்திய சம்பவம் அண்மையில் தமிழ்நாடு அரியலூர் கிராமத்தில் இடம் பெற்றது.

இசைக்கு உருகிய பசுவானது பாலைப் பொழிகின்ற போது வானம் மட்டும் வளைந்து கொடுக்காதா என எண்ணிய அக்கிராம மக்கள் மழை வேண்டி இசை நிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

அந்த இசை நிகழ்ச்சியின் பின்னர் பெரும் மழை பெய்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. (இ)

## மணலாறில்...

(முதலாம் பக்கத் தொடர்)

யாச் செய்திகள் தெரிவித்தன.

கல்யாணபுரம் பகுதியில் நடந்த சண்டையில் ஏழு பொது மக்களும், ஏழு விடுதலைப் புலிகளும் உயிரிழந்ததாகவும் —

மூன்று படையினர் காயமடைந்ததாகவும் —

படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதல் குறித்துக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் வெளியிட்ட தகவலையே 'புலிகளின் குரல்' வானொலியும் நேற்று அறிவித்தது.

களத்திலிருந்து தகவல்களைத் தாங்கள் எதிர்பார்த்திருப்பதாகவும் புலிகளின் குரல் தெரிவித்தது. (உ-5-164)

# 96இல் நடந்த பரீட்சையின் அடிப்படையில் ஆயிரத்து 427 ஆசிரியர்கள் வடக்கு கிழக்குக்கு நியமனம்

யாழ்ப்பாணம், செப். 9

1996 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட — ஆசிரியர் தேர்வுக்கான — போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் வடக்குக் கிழக்கில் ஆயிரத்து 427 பேருக்கு விரைவில் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவிருக்கின்றன.

நியமிக்கப்பட இருப்பவர்களில் ஆயிரம் பேர் தமிழ் மொழி மூல ஆசிரியர்களாக இருப்பர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் ஒக்டோபரில் நடைபெறும் என்றும்—

நியமனம் நவம்பரில் வழங்கப்படும் என்றும்—

சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-164)

## மருந்துக் களஞ்சியத்தில் எலித் தொல்லை

நெல்லியடி, செப். 9

மந்திகை ஆஸ்பத்திரி மருந்துக் களஞ்சியத்தில் எலிகளின் தொல்லை அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மருந்து வகைகள் நாசமாகியுள்ளன.

எலிகளை ஒழிப்பதற்கு வசதியாக எலிப் பொறிகளை வழங்குமாறு பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரிடம் கேட்டுள்ளார். (ஐ-109

## கிருஷாந்தி கொலை வழக்கு நவம்பருக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, செப். 9

கிருஷாந்தி குமாரசுவாமி மற்றும் மூவர் கைதடி— நாவற்குழிப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மூன்று நீதிபதிகளைக் கொண்ட — மேல் நீதிமன்றத்தின் — 'ட்ரயல் அட்பார்' முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப் பட்டபோது —

பொலீஸார், இராணுவத்தைச் சேர்ந்த ஒன்பது எதிரிகளினதும் சார்பில் பிணை மனுக்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. ஆனால் அந்த மனுக்களை நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

அதனையடுத்து வழக்கு நவம்பர் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# பொலீஸார்- அதிரடிப்படை கிழக்கில் கூட்டு நடவடிக்கை!

கொழும்பு, செப். 9

மட்டக்களப்புப் பகுதியில் பொலீஸாரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து விசேட கூட்டு நடவடிக்கை ஒன்றினை ஆரம்பித்துள்ளனர்-என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஒளிந்துள்ள விடுதலைப் புலிகளைக் கண்டுபிடுப்பதற்காகவே இந்த விசேட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகஇலங்கைவானொலி தெரிவித்தது.

காத்தான்குடி: புதுக்குடியிருப்பு, ஆரையம்பதி காட்டுப்பகுதிகளிலேயே இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பல்வேறுதாக்குதல் சம்பவங்களில் ஈடுபட்ட பெரும்பாலான விடுதலைப் புலிகள் இந்தக்காடுகளிலேயே ஒளித்திருப்பதாகப் படையினருக்குத் தகவல் கிடைத்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

## பண நோட்டு அச்சிடும் உபகரணம் மீட்பு

கொழும்பு, செப். 9

போலி ஆயிரம் ரூபா நோட்டுக்களை அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் உபகரணங்களை கொள்ளுப்பிட்டியில் பொலீஸார் கண்டுபிடித்துள்ளனர்.

கணனியின் உதவியுடன் இந்தப் போலி ஆயிரம் ரூபா நோட்டுக்கள் அச்சிடப்பட்டு வந்ததாகச் சொல்லப்படுகிறது.

இத்தகைய போலி ஆயிரம் ரூபா நோட்டை மாற்றுவதற்கு இருவர் முயன்றபோது அது பற்றிப் பொலீஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது என்றும் —

அதன் பின்னரே கொள்ளுப்பிட்டிப் பகுதியில் கட்டடம் ஒன்றைச் சோதனையிட்ட பொலீஸார் போலி நோட்டுக்களை அச்சிடும் உபகரணங்களைக் கண்டுபிடித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகப் பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஐ)

## சித்தாண்டியில் புலி உறுப்பினர் பலி!

சித்தாண்டியில் கடந்த ஞாயிறுஇரவுபடையினர்நடத்தியதாக்குதலின்போது விடுதலைப் புலி உறுப்பினர் ஒரு [illegible] ஆயுதங்கள் பலவும் கைப்பற்றப்பட்டதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## இதயங்களை பிழிந்தெடுத்த டயானா பற்றிய பாடல்

லண்டன், செப். 9

இளவரசி டயானாவின் இறுதி இறை வழிபாட்டில் சகலரது இதயங்களையும் பிழிந்து எடுத்த பிரபல பாடகர் ஹெலீற்றன் ஜோன் பாடிய ''கன்டில் இன் த வின்ட்'' பாடலை ஒலி நாடாவாக வெளியிட ஒலிப்பதிவு நடைபெற்றுள்ளது.

இந்த நூற்றாண்டில் ஆங்கில உலகில் அதிகமாக விற்பனையாகப் போகும் ஒலி நாடாவாக இது இருக்குமென பரவலாகக் கணிக்கப்படுகின்றது.

இதற்கு முன்பு அதிக விற்பனையான ஒலி நாடாப் பாடல் 1984 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ''இது கிறிஸ்து பிறப்பு விழா என்று அவர்களுக்குத் தெரியுமா? என்ற பாடலாகும். 35 லட்சம் பிரதிகள் அது விற்பனையாகியது.

ஹெலீற்றன்ஜோன் அவர்களின் ''கன்டில் இன் த வின்ட்'' பாடல் 33 ஆண்டுகளுக்கு முன் டயானாவைப் போலவே 36 ஆம் வயதில் இறந்து போன உலகப் புகழ் பெற்ற மாலின் மன்றோவுக்காக இசையமைக்கப் பட்டதாகும்.

அதனுடைய வார்த்தைகள் டயானாவுக்காக மாற்றியெழுதப்பட்டுள்ளன. (இ-5)

## சர்ச்சைக்குரிய ஈ.பி.டி.பி.யின் 2எம்.பிக்களுக்கும் எதிராக மீண்டும் விசாரணை!

கொழும்பு, செப். 9

ஈ.பி.டி.பி. யின் சர்ச்சைக்குரிய இரண்டு எம்பிக்களுக்கும் எதிராகக் கட்சியினால் மீண்டும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

ஆர். இராமேஸ்வரன் (மதன்), ஆர். இராமமூர்த்தி (சீலன்) ஆகிய இரு எம். பிக்களுக்கும் எதிராகவே கட்சியினால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஈ. பி. டி. பி. கடந்த பொதுத் தேர்தலில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட்டு நாடாளுமன்றத்தில் ஒன்பது உறுப்பினர்களைப் பெற்றுக் கொண்டது தெரிந்ததே.

அவர்களில் மேற்படி இருவரையும் கட்சியில் இருந்து விலக்கும் உத்தரவைக் கட்சிச் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா முன்னர் விடுத்திருந்தார்.

இதனால் பதவி இழக்கும் ஆபத்தை எதிர்நோக்கிய இவ்விரு எம். பிக்களும் சுயேட்சைக் குழுவின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா மீது உயர் நீதி மன்றில் மனுத் தாக்கல் செய்திருந்தனர். அந்த மனுவை விசாரித்த உயர்நீதி மன்றம் மேற்படி இருவரையும் கட்சியில் இருந்து அல்லது சுயேச்சைக் குழுவில் இருந்து வெளியேற்றும் டக்ளஸ் தேவானந்தாவின் முடிவை நிராகரித்து, தொடர்ந்து அவர்கள் இருவரும் எம். பியாக இருக்க வழி செய்யும் விதத்தில் தீர்ப்பு வழங்கியிருந்தது. தற்போது இரண்டு எம்.பிக்களுக்கும் எதிராகத் — தம்மீது அவதூறு பிரயோகித்ததாக குறிப்பிட்டு —டக்ளஸ் தேவானந்தா குற்றம் சுமத்தியுள்ளார்.

இன்று நடைபெறும் சுயேச்சைக் குழு எம்.பிக்களின் கூட்டத்தில் இக் குற்றச்சாட்டுக் குறித்து விசாரிக்கப்படவிருப்பதாகவும் அதற்குச் சமுகமளிக்கும்படியும் மேற்படி இருவருக்கும் டக்ளஸ் தேவானந்தாவின் சார்பில் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09-09-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org